**தேசிய கால்நடை வள அபிவிருத்திச் சபை மற்றும் அதன் துணைக் கம்பனிகளினதும் - 2018**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தேசிய கால்நடை வள அபிவிருத்திச் சபையின் (சபை) மற்றும் அதன் துணைக் கம்பனிகள் உள்ளிட்ட தொகுதியின் ("தொகுதி") 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் நிதி நிலைமை கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான இலாப நடடக்கூற்று மற்றும் ஏனை விரிவான வருமானக் கூற்று, உரிமை மாற்றல் கூற்று மற்றும் காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புகள், பொழிப்பு செய்யப்பட்ட முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான தேசிய கால்நடை வள அபிவிருத்திச் சபை மற்றும் அதன் துணைக் கம்பனிகளிகள் உள்ளிட்ட தொகுதியின் நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரைகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் கீழ் மற்றும் 1979 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகள் பிரகாரம் எனது பணிப்பின் பெயரில் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது அறிக்கை உரிய காலத்தில் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்படும்.

எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தைத் தவிர்த்து, சபையின் மற்றும் தொகுதியின் நிதிக்கூற்றினூடாக 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்ற வகையில் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, சபை தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது நிறுவகத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால்

தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு நிறுவகம் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.
இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்.

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக் கொள்வதற்காகவேயன்றி நிறுவகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு நிறுவகத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றி அமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களில உள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- நிறுவகத்தின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைமுறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- நிறுவகத்தின் கட்டுப்பாட்டு சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்து மூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் நிறுவனம் இணங்கியிருந்ததா என்பதும்,

- நிறுவகத்தின் அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- நிறுவகத்தின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுததப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

**1.5 நிதிக்கூற்றுக்கள்**

**1.5.1 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காதவைகள்**

| | குறித்த நியமக் குறிப்புடன் இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | இலங்கை நிதி அறிகையிடல் நியமம் 9 இன் 5.5.15 பந்தி பிரகாரம் வியாபார மற்றும் ஏனைய கடன்படுனர் மீதியான ரூபா 175,527,953 இன் பிற்காலத்தில் அளவிட எதிர்பார்த்த கடனை நட்ட முறையை பயன்படுத்த வேண்டிய போதும் அவ்வாறு செய்திருக்காததன் விளைவாக மீளாய்வாண்டில் வியாபார மற்றும் ஏனைய கடன்படுனர் கூடுதலாக அல்லது குறைவாக கணக்கிடப்பட்டுள்ளதாக அவதானிக்கப்பட்டது. | ஊழியர் கடன் 8 சதவீத வட்டி விகிதத்தில் வழங்கியுள்ளதுடன் அது நிலவிய வட்டி விகிதத்திற்கு சமமாகும். அதன் பிரகாரம் பயனுள்ள வட்டி விகிதமொன்றை கணிப்பீடு செய்ய தேவைப்படாது. ஏனைய நீண்ட கால கிடைக்க வேண்டியவை தொடர்பாக தற்போது ஐயக்கடன் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. | நியம ஏற்பாடுகள் பிரகாரம் வியாபார மற்றும் ஏனைய கடன்படுனர் பிற்காலத்தில் அளவிடல் மேற்கொள்ள வேண்டும். |
| (ஆ) | இலங்கை கணக்கீட்டு நியமம் 16 இன் 34 பந்தி பிரகாரம் ஆதனம் பொறிகள் மற்றும் உபகரணங்களின் நியாயமான பெறுமதியில் ஏற்படும் மாற்றத்தின் மீது பெறுமதி பாரிய அளவில் மாற்றமடையாத சந்தர்ப்பங்களில் குறைந்த பட்சம் மூன்று அல்லது ஐந்து ஆண்டுகளிற்கு ஒரு முறை மீள் மதிப்பீடு செய்ய வேண்டிய போதும் சபைக்கு சொந்தமான ரூபா 2,845,805,495 ஆன அனைத்து சொத்துக்களுயும் 2004 ஆண்டின் பின்னர் மீள் மதிப்பிட்டிருக்கவில்லை. | இச் சொத்துக்களை மீள் மதிப்பீடு செய்யதற்கு செலவொன்றை செய்ய வேண்டி ஏற்படுவதுடன் சபையில் காணப்படும் நிதி நெருக்கடி காரணமாக அச் செலவை மேற்கொள்வது கடினமாகையால் அவ்வாறான மீள் மதிப்பீடொன்று செய்யப்படவில்லை. எனினும் நிதி நிலைமை சீரானவுடன் மீள் மதிப்பிடு செய்ய எதிர்பார்க்கிறேன். | நியம ஏற்பாடுகள் பிரகாரம் ஆதனம் பொறிகள் மற்றும் உபகரணங்களின் நியாயமான பெறுமதியினை காட்ட வேண்டும். |
| (இ) | இலங்கை கணக்கீட்டு நியமம் 16 இன் 50 மற்றும் 51 ஆம் பந்திகள் பிரகாரம் பயன்படுத்துகின்ற சொத்துக்களின் ஆயுட்காலம் வருடாந்தம் மீளாய்வு செய்யப்பட்டு ஆக்கபூர்வமான ஆயுட்காலமொன்று மதிப்பிடப்பட்டு கணக்குகளில் மதிப்பீட்டு வேறுபாடொன்றாக கணக்கீடு செய்ய வேண்டிய போதும், நிலையான சொத்துக்கள் பதிவேட்டில் குறிப்பிடப்பட்டுள்ள ரூபா 254,755,187 பெறுமதியான தோட்ட உபகரணங்கள், வீட்டு உபகரணங்கள், மோட்டார் | இச் சொத்துக்களை மீள் மதிப்பீடு செய்யதற்கு செலவொன்றை செய்ய வேண்டி ஏற்படுவதுடன் சபையில் காணப்படும் நிதி நெருக்கடி காரணமாக அச் செலவை மேற்கொள்வது கடினமாகையால் அவ்வாறான மீள் மதிப்பீடொன்று | நியம ஏற்பாடுகள் பிரகாரம் முற்றாக பெறுமானத் தேய்விடப்பட்டுள்ள சொத்துக்களின் பயனுள்ள ஆயட்காலத்தை மீளாய்வு செய்து நிதிக்கூற்றுக்களில் செம்மையாக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வாகனங்கள், அலுவலக உபகரணங்கள், இயந்திர உபகரணங்கள் மற்றும் கட்டமைப்பு என்பவைகள் முழுமையாக தேய்வடைந்தும் பயன்படுத்தப்பட்ட போதும் நியமத்தின் பிரகாரம் ஆயட்காலத்தை மீளாய்வு செய்திருக்கவில்லை. | செய்யப்படவில்லை. எனினும் நிதி நிலைமை சீரானவுடன் மீள் மதிப்பிடு செய்ய எதிர்பார்க்கிறேன். | |
| (ஈ) | இலங்கை கணக்கீட்டு நியமம் 40 இன் 6 ஆம் பந்தி பிரகாரம் குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ள காணிகள், முதலீட்டுச் சொத்தாக கணக்கீடு செய்யப்பட வேண்டிய போதும் வெளிசர மற்றும் மஹபேரியதென்ன பண்ணைகளிற்கு சொந்தமான 02 தனியார் கம்பனிகளிற்கு குத்தகை வழங்கியுள்ள ஹெக்டயார் 206.87 ஆன காணி ஆதன பொறிகள் மற்றும் உபகரணங்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தன. | நியமம் 40 இன் பிரகாரம் எதிர்காலத்தில் கணக்கீடு செய்ய தேவையான நடவடிக்கை எடுக்கப்படும். | நியம ஏற்பாடுகள் பிரகாரம் முதலீட்டு சொத்துக்கள் கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (உ) | இலங்கை கணக்கீட்டு நியமம் 41 இன் 2 ஆம் பந்தியின் (ஆ) பிரிவு மற்றும் 4 ஆம் பிரிவு பிரகாரம் விடய பரப்பிற்கு உட்படாத சபையில் காணப்படும் நுகர் உயிரியல் விஞ்ஞானச் சொத்துக்கள இலங்கை கணக்கீட்டு நியமம் 16 இன் கீழ் உரித்தாவதுடன் அச் சொத்துக்களை இனங்காணல், அளத்தல் மற்றும் வெளிப்படுத்தல் போன்றவற்றை அதற்கு இணங்க மேற்கொள்ள வேண்டிய போதும் சபையின் நிதிக்கூற்றுக்களில் உள்ளடங்கும் ரூபா 809,604,153 ஆன நுகர் உயிரியல் விஞ்ஞானச் சொத்துக்கள் தொடர்பில் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | கணக்குகளில் காணப்படும் இவ்வாறானவற்றை சீராக்க தற்போது திட்டமிடப்பட்டுள்ளதுடன் அதன் பிரகாரம் சொத்துக்களை இனங்கண்டு எதிர்காலத்தில் குறித்த வெளிப்படுத்தல்களை மெற்கொள்ள எதிர்கார்க்கிறேன். | நியம ஏற்பாடுகள் பிரகாரம்............... உயிரியல் விஞ்ஞான சொத்துக்களை இனங்காணல், அளத்தல் மற்றும் வெளிப்படுத்தல் ஆகியவற்றை மேற்கொள்ள முடியும். |
| (ஊ) | வ/ப இலங்கை கோழிகள் கட்டுப்பாட்டு அபிவிருத்தி தனியார் கம்பனியின் தெங்கு மற்றும் அன்டிய உற்பத்திகளினூடாக நடைமுறை முயையாண்டில் ரூபா 7,687,939 தொகை அதாவது மொத்த வருமானத்தில் 11.92 சதவீத பங்களிப்பை கம்பனிக்கு வழங்கிய போதும் தெங்கு பயிர்செய்கையின் கிரயத்திற்கு அல்லது நியாயமான பெறுமதிக்கு மதிப்பிட்டு முதிர்ந்த பயிர்களாக இலங்கை கணக்கீட்டு<br><br>நியமம் 41 இன் 45 பந்தி பிரகாரம் கணக்கீடு செய்யாததால் | தெங்கு பயிர்செய்கை கிரயத்தினை அல்லது நியாயமான பெறுமதிக்கு நிதிக்கூற்றுககளினூடாக முன்வைக்க எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | நியம ஏற்பாடுகள் பிரகாரம் முதிர்ந்த தென்னை மரங்களின் பெறுமதியை கிரயம் அல்லது நியாயமான பெறுமதிக்கு மதிப்பிட்டு கணக்கீடு செய்ய வேண்டும். |

நிறுவனத்தின் நடைமுறையல்லாத சொத்துக்களில் நியாயமான நிலைமையினை காட்டவிலலை என அவதானிக்கப்பட்டது.

### 1.5.2 கணக்கீட்டு குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டினுள் சபையினால் மஹபேரிதென்ன பண்ணையின், விக்டோரியா பகுதியை இரானுவத்திற்கு ஒப்படைத்தற்காக ரூபா 6,500,000 ஆன தொகையொன்றை பெற்றிருந்த போதும் அப் பகுதியின் கிரயத்தை கணக்குகளிலிருந்து அகற்ற நடவடிக்கை எடுத்திருக்காததுடன் அதற்குரிய இலாபத்தை அல்லது நட்டத்தை இனங்கண்டு நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தி இருக்கவில்லை. | 2018/12/20 திகதி மஹபேரிதென்ன பண்ணையின் விக்டோரியா பகுதியை இரானுவத்திற்கு ஒப்படைத்தற்காக ரூபா 6,500,000 ஆன முற்பணத் தொகையொன்று கிடைத்ததுடன் 2019 ஆண்டில் எஞ்சிய தொகையை வழங்கி கொடுக்கல் வாங்கலை பூர்த்தி செய்துள்ளது. அதன் பிரகாரம் உரிய காணியின் அபிவிருத்தி கிரயமான ரூபா 46,804 ஆன தொகை 2019 ஆண்டில் கணக்குகள் தயாரிக்கும் போது அகற்றப்பட்டுள்ளது. | விற்பனை செய்த காணியை நிலையான சொத்துக்களிலிருந்து அகற்ற வேண்டும். |
| (ஆ) | 2016 ஆண்டில் சபையினால் வெகுமதி செலுத்த ரூபா 12,957,479 ஏற்பாடு செய்து அவற்றில் ரூபா 5,219,946 செலுத்திருந்ததுடன் எஞ்சிய ரூபா 7,737,533 ஆன மீதி ஏற்பாட்டின் கீழ் காட்டப்பட்டிருந்தது. அம்மிகை ஏற்பாடு 2018 ஆண்டில் நிதிக் கூற்றுக்களில் முன்கொண்டு வரப்பட்டிருந்ததுடன் அதனை திரண்ட இலாபத்திற்கு செலவு வைக்க வேண்டிய போதும் அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை. | 2019 ஆண்டில் குறித்த தவறை சரி செய்ய நடவடிக்கை எடுக்க ப்படும். | வெகுமதி மிகை ஏற்பாட்டை திரண்ட இலாபத்திற்கு சீராக்கம் செய்ய வேண்டும். |
| (இ) | மிளாய்வாண்டு திசெம்பர் 31 திகதி சபையின் நிதி நிலைமைக் கூற்றின் பிரகாரம் பாற் கருத்திட்டம், டிலயிட் கருத்திட்டம் மற்றும் விற்பனை நிலைய சாதாரண இருப்பு கூட்டுத் தொகை ரூபா 38,466,731 ஆன போதும் இருப்பு கணிப்பீட்டு அறிக்கை பிரகாரம் மொத்த இருப்பு பெறுமதி ரூபா 5,057,020<br><br>ஆனதில் ரூபா 33,409,711 ஆன வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது. | பாற் கருத்திட்டத்தின் ரூபா 23,797,076 ஆன இணங்காத இருப்பு பெறுமதி பண்டக கணிப்பீட்டு அறிக்கையினுள் உள்ளடக்கப்படாததுடன் மற்றும் கிருமி நீக்கம் செய்யப்பட்ட திரவ பால் உற்பத்திகளிற்கு உரிய அனைத்து மூலப்பொருள் இருப்பும் 2018 திசெம்பர் 31 அளவில் முதலீட்டு வலயத்தில் Tunip Lanka (Pvt) Ltd நிறுவனத்தின் பொறுப்பில் இருந்ததுடன் வெலிசர பண்ணையினுள் | நிதி நிலைமமை கூற்றில் இருப்பு மீதிகளை சரியாக காட்ட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | குறித்த மூலம்பொருள் இருப்பு இருக்காததால், 2018 ஆண்டில் பண்டக கணிப்பீட்டு சபையினால் 2018 ஆண்டில் பண்டக கணிப்பீட்டு அறிக்கையிற்கு அந்த டிலய்ட் உற்பத்தி மூலப்பொருளை உள்ளடக்கி இருக்கவில்லை. | |
| (ஈ) | சபையின் 04 பண்ணைகளில் 2018 திசெம்பர் 31 திகதிக்கு 22 இருப்பு உருப்படிகளின் புத்தக மீதி மற்றும் உள்ளவாறான மீதிகளிற்கு இடையில் ரூபா 18,809,837 ஆன வித்தியாசம் அவதானிக்கப்பட்டது. | ஐயவினாவில் குறிப்பிடுவது போல் ஆடிகம பண்ணையின் பண்டக கணிப்பீட்டு அறிக்கைக்கு தகவல்களை உள்ளீடு செய்கையில் வேறுபாட்டுடன் தவறுதலாக குறிப்பிடப்பட்டுள்ளது. பெலிகம பண்ணையில் தென்னை இருப்பு மற்றும் Timber stock;Mara Plank இருப்பு தவறுதலாக அவை தட்டச்சு செய்ய முடியாதுள்ளது. மஹபேரியதென்ன பண்ணையில் Coconut & Copra உள்ளவாரான இருப்பு மீதியை விட குறைந்திருந்ததுடன் அவற்றை குறித்த அலுவலர்களிடமிருந்து அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் Coffee 05 கிலோ கிராம் குறைவாக இருப்பு புத்தகத்திற்கு எடுக்கப்பட்டுள்ளதுடன் அது பண்டக கணிப்பீட்டின் பின்னர் சரிசெய்யப்பட்டுள்ளது. மரதவில பண்ணையின் பண்டக கணிப்பீட்டு அறிக்கை தயாரிக்கும் போது தரவுகளை கணனி மயப்படுத்தும் போது தவறுதலாக ஐயவினாவில் குறிப்பிடப்பட்டுள்ள உள்ளவாரான மீதி குறிப்பிடப்படவில்லை. | உள்ளவாரான மீதியை புத்தக மீதியுடன் இணக்கி இணக்கமின்மையை கண்டறிந்து சரிசெய்து கணக்கீடு செய்ய வேண்டும். |
| (உ) | சபைக்கு சொந்தமான பண்ணைகளில் கணிசமான அளவு தென்னை மரங்கள் மற்றும் மரப் பெறுமதியான மரங்களை மதிப்பிட்டு கணக்கீடு செய்திருக்காததுடன் அவ்வாறு கணக்கீடு செய்யாத தென்னை மரங்கள் மற்றும் தேக்க மரங்களை விற்பனை செய்வதில் | பண்ணைகளில் வர்த்தக பயிராக பயிரிடப்பட்டுள்ள அனைத்து மரங்களும் கணக்குகளில் எடுத்துக் காட்டப்படுவதுடன் பண்ணைகளினுள் நீண்ட காலமாக காணப்படும் பண்ணையின் வேலிகளிற்கு நடப்பட்ட மரங்கள் போன்று | சபைக்கு சொந்தமான பண்ணைகளில் தென்னை மரம் மற்றும் மரப் பெறுமதியான மரங்களை மதிப்பிட்டு கணக்கீடு செய்ய |

| | | | |
|---|---|---|---|
| | ரூபா 33,958,770 ஆன வருமானமொன்று ஈட்டப்பட்டிருந்தது. | பண்ணைகளின் ஊழியர்களினால் பல சந்தர்ப்பங்களில் அவர்களின் சுய முயற்சியால் நாட்டப்பட்டுள்ள மரங்கள் பண்ணையினால் முகாமை செய்யப்படாததால் பெறுமதி கணக்குகளில் எடுத்துக் காட்டப்படுவதில்லை. தென்னை மரங்களின் பெறுமதியை நிதிப் பிரிவிலுள்ள தரவுகளைக் கொண்டு சரியாக இனங்காண முடியாததால் இப் பிரச்சினை ஏற்பட்டுள்ளது. | வேண்டும். |
| (ஊ) | 2018 திசெம்பர் 31 திகதியன்று வருடாந்த பண்டக கணிப்பீட்டு அறிக்கை பிரகாரம் 13,327 மாடுகள் /எருதுகளும் 38,803 கோழிகளும், 9,554 முட்டை கோழிகளும் 6,956 செம்பேரி ஆடுகளும் 990 ஆடுகளும் 208 முயல்களுமாக காட்டப்பட்டதுடன் அட்டவணை பிரகாரம் அவைகள் முறையே 13,100 உம் 26,638 உம் 19,706 உம் 6,982 உம் 989 மற்றும் 182 உமானதில் மிருகங்களின் எண்ணிக்கையில் 22,597 ஆன வித்தியாசமானது. மேலும் மாரவில பண்ணையில் ரூபா 397,445 பெறுமதியான வர்த்தக கருத்திட்ட மற்றும் முட்டையிடும் கோழிகளின் எண்ணிக்கை காட்டப்படாததுடன் மார்டின் பண்ணையில் 03 பசுமாடுகளின் பெறுமதியும் உள்ளடக்கப்படவில்லை. | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | பௌதீக கணிப்பீட்டு அறிக்கைகளில் காட்டப்படும் மீதிகள் நிதிக்கூற்றுக்களின் இறுதி இருப்பாக கணக்கீடு செய்ய வேண்டும். |
| (எ) | 2018 திசெம்பர் 31 திகதியன்று நிதிக்கூற்றுக்களில் வ/ப மஹவெலி கால்நடை வியாபார கம்பனியிடமிருந்து கிடைக்க வேண்டிய மீதி ரூபா 4,184,415 ஆன போதும் வ/ப மஹவெலி கால்நடை வியாபார கம்பனி நிதிக்கூற்றுக்களில் தேசிய கால்நடை வள அபவிருத்தி சபைக்கு செலுத்த வேண்டிய மீதி ரூபா 3,079,094 ஆகும். அதன் பிரகாரம் அம் மீதிகளிற்கிடையில் ரூபா 1,105,321 ஆன வித்தியாசம் அவதானிக்கப்பட்டதுடன் இவ் வித்தியாசத்தை கண்டறிந்து சீராக்க நடவடிக்கை | இது பற்றி கண்டறிந்து எதிர்காலத்தில் தேவையான சீராக்கங்களை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கிறேன். | வ/ப மஹவெலி கால்நடை வியாபார கம்பனியிடமிருந்து கிடைக்க வேண்டிய மீதியின் வித்தியாசத்தை கண்டறிந்து சீராக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

எடுத்திருக்கவில்லை.

| | | | |
|---|---|---|---|
| (ஏ) | குருங்கால முதலீட்டு நிலையான 02 வைப்புக்கள் தொடர்பாக 2018 திசெம்பர் 31 திகதி கிடைக்க வேண்டிய வட்டி வருமான கூட்டுத் தொகை ரூபா 1,937,062 ஆன போதும் அதனை ரூபா 1,320,484 ஆக நிதிக்கூற்றுக்களில் காட்டியிருந்ததால் கிடைக்க வேண்டிய நிலையான வைப்பு வட்டி வருமானம் ரூபா 616,578 இனால் குறைவாக காட்டப்பட்டிருந்தது. | ஏற்றுக்கொள்கிறேன் அதனை 2019 ஆண்டில் கணக்குகளை சமர்ப்பிக்கும் போது சீராக்க நடவடிக்கை எடுக்கிறேன். | குருங்கால முதலீட்டு நிலையான வைப்புக்களிற்கு கிடைக்க வேண்டிய வட்டி வருமானத்தை சரியாக கணக்கீடு செய்ய வேண்டும். |
| (ஐ) | டயகம பண்ணையில் பால் உற்பத்தி கால்நடைகளின் கால்நடைகளுக்கு வெவ்வேறாக எடுக்க வேண்டிய போதும் டெம்பர்ட் பிரீட் மற்றும் டெம்பர்ட் ஹய்பர்ஸ் ஆகிய இரண்டு வகை கால்நடைகளின் நாளாந்த பால் உற்பத்தி 10 லீட்டராக கருதி ரூபா 3,530,000 கணக்கெடுப்பில் சேர்க்கப்பட்டிருந்தது. கணக்காய்வு பரிசோதனையின் போது 10 லீட்டரிலும் குறைந்த கால்நடைகள் இருந்தால் நிதிக்கூற்றுக்களில் காட்டப்படும் கால்நடைகளின் எண்ணிக்கை மிகையாக கணக்கிடப்பட்டிருந்தது. | தவறொன்று ஏற்பட்டுள்ளதாக ஏற்றுக்கொள்கிறேன். அதன் பிரகாரம் எதிர்காலத்தில் அதனை சீராக்க நடவடிக்கை எடுக்கிறேன். | பசு மாடுகளை சரியாக மீள் கணக்கிட்டு கணக்கீடு செய்ய வேண்டும். |
| (ஒ) | கொஹுல்வெவ, நிகவெரடிய, ரிதியகம மற்றும் போபத்தளாவ ஆகிய பண்ணைகளில் 2,722 கால்நடைகளின் கணக்கெடுப்பின் போது அக் கால்நடைகளின் நாளாந்த சராசரி பால் உற்பத்தி முறையே 7,4,15 லீட்டர் மற்றும் 12 லீட்டராக கருதி ரூபா 24,437,300 பெறுமதி சேர்க்கப்பட்டிருந்தது. ஒவ்வொறு பசு மாடுகளினதும் உள்ளவாரான பால் உற்பத்திக்காக அவ்வாறு சராசரி பெறுமானத்தை பயன்படுத்துவது தவறுடன் கூடியதால் நிதிக்கூற்றுக்களில் காட்டப்படும் கால்நடைகளின் பெறுமதி மிகையாகஅல்குறைவாக கணக்கிடப்பட்டிருந்தது. | தவறொன்று ஏற்பட்டுள்ளதாக ஏற்றுக்கொள்கிறேன். அதன் பிரகாரம் எதிர்காலத்தில் அதனை சீராக்க நடவடிக்கை எடுக்கிறேன். | பசு மாடுகளை சரியாக மீள் கணக்கிட்டு கணக்கீடு செய்ய வேண்டும். |
| (ஓ) | 2012 ஆண்டிற்கு முன்னரிலிருந்து நிலவிவரும் ரூபா 4,506,601 ஆன கிடைக்க வேண்டிய பெறுமதி | உள்நாட்டு இறைவரித் திணைக்களத்துடன் கலந்துரையாடி அவ்வாறான | கணக்காய்விற்கு தேவையான தகவல்களை |

| | | | |
|---|---|---|---|
| | சேர்கப்பட்ட வரி பெறுமதி தொடர்பாக கணிப்பீட்டு ஆவணங்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | வரித் தொகையொன்று செலுத்த இல்லையெனின் உரிய அங்கீகாரத்துடன் பதிவழிக்க நடவடிக்கை எடுக்கிறேன். | வழங்க வேண்டும். |
| (ஔ) | 2018 திசெம்பர் 31 திகத தேசிய கால்நடை வள அபவிருத்தி சபையினால் முன்வைக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் காட்டப்படும் வியாபார மற்றும் ஏனைய கிடைக்க வேண்டிய மீதி ரூபா 203,014,385 ஆவதுடன் ஓராண்டிற்கு அதிக வியாபார மற்றும் ஏனைய கடன்படுனர் மீதி ரூபா 103,217,686 மற்றும் 5 ஆண்டுகளை விஞ்சிய மீதி ரூபா 57,811,745 ஆனது. இக் கடன் மீதிகளை அறவிடுவது நிச்சயமற்றதாக இருந்தது. | வருடாந்தம் 5 ஆண்டுகளை விஞ்சிய அனைத்து கடன்படுனர்களுக்காக 100% ஐயக்கடன் ஏற்பாடும் 5 ஆண்டுகளிலும் குறைந்த கடன்படுனர்களுக்காக காலரீதியாக ஐயக்கடன் ஏற்பாடு செய்யப்படுவதால் கடன்படுனர் மிகை கணக்கெடுப்பு இடம்பெறவில்லை. | வியாபார மற்றும் ஏனைய கடன்படுனர் மீதிகளை காலரீதியாக அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (க) | வ/ப இலங்கை கோழிகள் கட்டுப்பாட்டு அபிவிருத்தி (தனியார்) கம்பனியின் 2018 திசெம்பர் 31 திகதி காணப்பட்ட ரூபா 3,476,588 பெறுமதியான 4,398 கோழிகளை மதிப்பிட்டு அக் கோழிகளிற்காக மீளாய்வாண்டினுள் செலவிடப்பட்டிருந்த மூலதனமாக்கப்பட வேண்டிய ரூபா 3,872,164 ஆன உணவு மற்றும் ஔடத கிரயமும் இறுதி இருப்புக்கு சேர்க்கப்படாததனால் மீளாய்வாண்டினுள் இலாபம் மற்றும் இருப்பு ரூபா 7,348,752 ஆன அளவினால் குறைத்துக்காட்டப்பட்டிருந்தது. | சீராக்க நடவடிக்கை எடுக்கிறேன். | இறுதி இருப்பை சரியாக நிதிக்கூற்றுக்களில் காட்ட வேண்டும். |

**1.6 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

**1.6.1 பெற வேண்டிய கணக்குகள்**

| | **கணக்காய்வு அவதானிப்புகள்** | **முகாமைத்துவத்தின் கருத்துரை** | **பரிந்துரைகள்** |
|---|---|---|---|
| (அ) | 2018 திசெம்பர் 31 திகதியன்று தேசிய கால்நடை வள அபிவிருத்தி சபையினால் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் காட்டப்படும் தென்னை தரகர்களிடமிருந்து கிடைக்க வேண்டிய தண்டப்பண மீதி ரூபா 21,171,911 ஆகும். | 5 ஆண்டுகளை விஞ்சிய மீதியான ரூபா 7,315,492 தொகையிலிருந்து பணமாக 2020.09.29 அன்று தீர்வு அமர்வூடாக ரூபா 3,652,886 தொகை | தென்னை தரகர்களிடம் இருந்து கிடைக்க வேண்டிய தண்டப் பணத்தை ஒப்பந்த பிரகாரம் அறவிட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அவற்றில் ஐந்து ஆண்டுகளை விஞ்சிய மீதி ரூபா 7,315,492 ஆனதுடன் அது மொத்த கிடைக்க வேண்டிய மீதியின் 34 சதவீதமாகும். சபையினால் அக் கிடைக்க வேண்டிய தொகையை அறவிட நடவடிக்கை எடுத்திருக்காததுடன் அத் தரகர்களுக்கு தொடர்ந்தும் தேங்காய்கள் விற்பனை செய்யப்பட்டிருந்தன. | அறவிடப்பட்டுள்ளது. W.T.Wass கம்பனி தவிர மேற் குறிப்பிட்ட மூன்று கம்பனிகள் மற்றும் G & J மெதிவ்ஸ் கம்பனியுடன் மாத்திரம் தற்போது கொடுக்கல் வாங்கல் செய்யப்படுகின்றது. | |
| (ஆ) | நான்கு ஆண்டுகளை விஞ்சிய ரூபா 32,650 பெறுமதியான விழா முற்பணத்தை அறவிட நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. மேலும் ஐந்து ஆண்டுகளை விஞ்சிய நான்கு பண்ணைகளின் அலுவலர்களிடமிருந்து கிடைக்க வேண்டிய விழா முற்பண பெறுமதி ரூபா 278,813 ஆனது. | தொடர்ந்தும் விழா முற்பணம் பணமாக ரூபா 8,200 ஆன தொகை அறவிட வேண்டும்.<br>ரூபா 278,813 ஆன தொகை விழா முற்பணம் அல்லாததுடன் ஆளணிக்காக வழங்கப்பட்ட கடனாகும்.<br>அறவிட முடியாத கடன் தொகையை பதிவழிக்கவும், ஏனைய கடன் தொகைகளை உரிய பொறுப்புதார அலுவலர்களிடமிருந்து அறவிடவும் நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | விழா முற்பணம் மற்றும் கடன் தொகையை உரிய பொறுப்புதார அலுவலர்களிடமிருந்து அறவிட வேண்டும். |
| (இ) | 2013 மே 13 திகதி இறக்குமதி செய்யப்பட்ட ஆனாலும் இறந்த பசு தொடர்பாக கிடைக்க வேண்டிய காப்புறுதி இழப்பீட்டு மீதியான ரூபா 19,253,926 தொகை வியாபார மற்றும் ஏனைய கடன்படுனர் மீதியில் காணப்பட்டதுடன் அதற்குரிய மிருங்களின் இலக்கங்கள் முன்வைக்கப்பட்டிருக்கவில்லை.<br>பாற் கருத்திட்டங்களிற்கு உரிய ஓராண்டை விஞ்சிய ரூபா 663,343 தொகை மற்றும் 2 ஆண்டுகளை விஞ்சிய ரூபா 34,100 ஆன கிடைக்க வேண்டிய மீதியை அறவிட்டிருக்கவில்லை. பிரதான அலுவலகம், ரொசிடா பண்ணையில் மற்றும் கொட்டுகச்சிய பண்ணையில் 05 ஆண்டுகளை விஞ்சிய பெறுமதி | இப் பெறுமதியை தற்போது அறவிட முடியாத கடனாக இனங்கண்டு அமைச்சின் பங்குபற்றலுடன் அமைந்த குழுவொன்றின் ஊடாக புத்தகங்களிலிருந்து பதிவழிக்க தேவையான நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | அறவிட வேண்டிய மீதியை காலரீதியாக அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ரூபா 18,576,776 ஆன கிடைக்க வேண்டிய மீதியை அறவிட நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | | |
| (ஈ) | ஓராண்டை விஞ்சிய முற்செலுத்தல் பெறுமதி ரூபா 421,649 ஆனதுடன் ஐந்து ஆண்டுகளை விஞ்சிய முற்செலுத்தல் பெறுமதி ரூபா 2,032,449 ஆனதுடன் அது பெற வேண்டிய மொத்த முற்செலுத்தலின் 27 சதவீதமானது. | 5 ஆண்டுகளை விஞ்சிய முற்செலுத்தல்களின் கூடிய பெறுமதி குறிப்பிடப்படுவது ஹாரகம பண்ணையின் நீதிமன்ற மிருகங்களை பராமரிக்க மேற்கொள்ளப்பட்ட செலவாவதுடன் அப் பெறுமதி ரூபா 1,852,218 ஆகும். இப்பெறுமதி கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு கூட்டத்திற்கு அனுப்பி வருமான கூற்றிற்கு உட்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும். 1 ஆண்டிற்கும் 02 ஆண்டிற்கும் இடையிலான முற்செலுத்தல் பெறுமதியை குறித்த செயற்பாடு முடிவடைந்த பின்னர் கணக்குகளில் தீர்க்கப்பட்டுள்ளது. | முற்செலுத்தலை விரையில் தீர்த்துக் கொள்ள வேண்டும். |
| (உ) | 5 ஆண்டுகளை விஞ்சிய பண்ணை ஆளணியிலிருந்து கிடைக்க வேண்டிய ரூபா 1,099,070 ஆன தொகையை அறவிட நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | 5 ஆண்டுகளை விஞ்சிய அறவிட முடியாத கடன்களை பதிவழிக்க தற்போது நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் எஞ்சிய கடனிற்காக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். | ஆளணியிலிருந்து கிடைக்க வேண்டிய கடனை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 1.6.2 செலுத்த வேண்டிய கணக்குகள்

| | கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | பிரதான அலுவலகத்தின் மொத்த கடன்கொடுனர் மீதி ரூபா 79,636,722 ஆனதுடன் அவற்றில் ரூபா 34,421,296 தொகை அதாவது 43 சதவீதம் 5 ஆண்டுகளை விஞ்சியுள்ளதுடன் சபையினால் தீர்த்திருக்கவில்லை. | அமைச்சின் பங்குபற்றலுடன் அமைந்த குழுவொன்றின் ஊடாக புத்தகங்களிலிருந்து பதிவழிக்க தேவையான நடவடிக்கை | கடன்கொடுனர் மீதியை தீர்த்துக்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | எடுக்கப்படுகின்றது. | |
| (ஆ) | தீர்க்கப்படாது மீள்செலுத்த வேண்டிய ஓராண்டை விஞ்சிய வைப்புப் பெறுமதி ரூபா 436,649 ஆனதுடன் ஐந்து ஆண்டுகளை விஞ்சிய வைப்பு பெறுமதி ரூபா 1,014,501 ஆனதில் அது செலுத்த வேண்டிய மொத்த வைப்புக்களின் 68 சதவீதமானது. | இவ் வைப்புக்களின் பங்குகளை பாதுகாப்பு வைப்பாக இன்னும் பயன்படுத்தப்படுவதுடன் எஞ்சிய பெறுமதியை பதிவேடுகள் பிரகாரம் தீர்க முடியுமா என கண்டறிய எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கிறேன். | மீள் செலுத்த வேண்டிய வைப்புக்களை தீர்துக் கொள்ள நடவடிக்கை நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவ தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை**

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | பீஈடீ/12 ஆம் இலக்க 2003 யூன் 02 ஆந் திகதிய பொது முயற்சிகள் சுற்றறிக்கை | (i) சுற்றறிக்கையின் 5.1.1 பிரிவு பிரகாரம் வேறுபாடுகள் நிலவும் போது வேறுபாடுகளை சரிசெய்து நாளாதுவரையாக்கிய கூட்டிணைந்த திட்டத்தை தயாரித்து சமர்பிக்க வேண்டிய போதும் 2018 ஆண்டு பாதிடப்பட்ட வருமானம் மற்றும் செலவுகளின் பிறழான வேறுபாடுகள் அவதானிக்கப்பட்ட போதும் சபையினால் அதன் பிரகாரம் குறித்த கூட்டிணைந்த திட்டத்தை நாளாதுவரையாக்கி சமர்பித்திருக்கவில்லை. | பாதிடப்பட்ட வருமானங்களின் மற்றும் செலவுகளின் வேறுபாட்டை அடிப்படையாகக் கொண்டு கூட்டிணைந்த திட்டத்தை நாளாதுவரையாக்க 2021 ஆண்டு முதல் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| | | (ii) 5.1.2 ஆம் பிரிவின் பிரகாரம் 2016-2020 கூட்டிணைந்த திட்டத்தில் நிறுவனத்திற்குச் சொந்தமாகக் காணப்படுகின்ற உற்பத்தி மற்றும் செயற்பாட்டு வசதிகள், மனிதவளம் மற்றும் முகாமைத்துவ | 2021-2025 கூட்டிணைந்த திட்டத்தை தயாரிக்கும் போது பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 5.1.2 ஆம் பிரிவின் கூட்டிணைந்த திட்டத்தில் உள்ளடங்க வேண்டிய விடயங்களை உள்ளடக்க | சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | திறன்கள், தொழிநுட்ப அறிவு, வியாபார நிலையங்களின் மற்றும் வளங்குனர்கள், நிறுவனக் கட்டமைப்பு, திட்ட கால எல்லையில் நிறைவேற்ற வேண்டிய இலக்குகள் மற்றும் நோக்கங்கள் தொடர்பாக செயல் நடவடிக்கை திட்டத்தில் உள்ளடங்கும் முகாமைத்துவ பொறுப்புக்கள், சபையின் கீழ் அமுல்படுத்தப்படுகின்ற கருத்திட்டங்கள் தொடர்பான தகவல்கள் உள்ளடக்கப்பட்டு இருக்கவில்லை. | நடவடிக்கை எடுக்கப்படும். | |
| (iii) | 5.1.3 பிரிவின் பிரகாரம் கூட்டிணைந்த திட்டத்தை பணிப்பாளர் சபை அங்கீகரித்த பின்னர் வரிசை அமைச்சு, பொது முயற்சிகள் தொடர்பான திணைக்களம், பொதுத் திறைசேரி மற்றும் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்பிக்க வேண்டிய போதும் 2016-2020 கூட்டிணைந்த திட்டத்தை 2016 ஒக்டோபர் 27 திகதி அங்கீகரித்து 2017 ஜூலை 12 திகதி தாமதித்து சமர்ப்பிக்கப்பட்டு இருந்தது. | கூட்டிணைந்த திட்டத்தை தயாரிக்கும் போது சில தாமதங்கள் இடம்பெற்றுள்ளது. | சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (iv) | 5.2.2(அ) பிரிவின் பிரகாரம் B தரத்திலான நிறுவனமொன்று மூலதன முதலீடு ரூபா 2.5 மில்லியன் இலும் அதிகமாக மேற்கொள்ளும் கருத்திட்டத்திற்காக சாத்தியப்பாட்டு ஆய்வொன்றை மேற்கொள்ள வேண்டியதுடன் சபை | ஏற்றுக்கொள்கிறேன். | சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| அத் தரத்திலான போதும் ரூபா 3.3 மில்லியனான புல் பயிரிடும் கருத்திட்டத்திற்காக அவ்வாறு சாத்தியப்பாட்டு ஆய்வொன்றை மேற்கொண்டிருக்கவில்லை. | | |
| (v) 5.2.4 பிரிவின் பிரகாரம் நிதி ஆண்டு ஆரம்பிக்க மூன்று மாதங்களிற்கு முன்னர் நகழ் பாதீட்டை அங்கீகாரம் பெற்றுக்கொள்ள பணிப்பாளர் சபைக்கு முன்வைக்க வேண்டிய போதும், சபையினால் பாதீட்டை அங்கீகாரத்திற்கு பணிப்பாளர் சபைக்கு முன்வைத்துள்ளது 2018 பெப்ரவரி 21 திகதியே ஆகும். | கருத்துத் தெரிவிக்கப்படவில்லை. | சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (vi) 5.2.5 பிரிவின் பிரகாரம் பணிப்பாளர் சபையினால் அங்கீகரித்து குறித்த நிதியாண்டு ஆரம்பிக்க 15 நாட்களிற்கு குறையாத காலத்தினுள் பாதீட்டை வரிசை அமைச்சு, பொது முயற்சிகள் தொடர்பான திணைக்களம், பொது திறைசேரி மற்றும் கணக்காய்வாளர் நாயகத்திற்கு முன்வைக்க வேண்டிய போதும் 2018 ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட பாதீடு பணிப்பாளர் சபையினால் அங்கீரிக்கப்பட்டிருந்தது 2018 பெப்ரவரி 27 திகதி ஆனதுடன் கணக்காய்விற்கு சமர்பிக்கப்பட்டிருந்தது 2019 மே 21 ஆம் திகதியாகும். | கருத்துத் தெரிவிக்கப்படவில்லை. | சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (vii) 6.5.1 பிரிவின் பிரகாரம் நிதியாண்டு முடிவடைந்து 60 நாட்களில் நிதிக்கூற்று | கருத்துத் தெரிவிக்கப்படவில்லை. | சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை |

| | | | | |
|---|---|---|---|---|
| | | மற்றும் வருடாந்த நகழ் அறிக்கையை கணக்காய்வாளர் நாயகத்திற்கு சமர்பிக்க வேண்டிய போதும் 2018 ஆண்டின் நிதிக்கூற்று மற்றும் வருடாந்த நகழ் அறிக்கை 2022 மார்ச் 22 திகதி முன்வைக்கப்பட்டிருந்தது. | | எடுக்க வேண்டும். |
| | | (viii) 7.4.1 பிரிவின் பிரகாரம் ஒவ்வொரு காலாண்டிற்கும் ஒரு முறை கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக் கூட்டம் நடாத்தப்பட வேண்டிய போதும், 2018 ஆண்டில் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக் கூட்டம் நடாத்தப்பட்டிருக்கவில்லை. | கருத்துத் தெரிவிக்கப்படவில்லை. | சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | 01/2014 இலக்க 2014 பெப்ரவரி 11 திகதிய பொது நிதிச் சுற்றறிக்கையின் 5(2) பந்தி | எதிர்பார்த்த வணிக செயற்பாடுகள் உள்ளடங்கிய செயல் நடவடிககை திட்டத்தில் உள்ளடங்க வேண்டிய வெலிசர பண்ணை, டிலையிட் கருத்திட்டம், பட்டய விற்பனை நிலையம் ஆகிய பிரிவுகளின் செயற்பாடு மற்றும் வருடாந்த பாதீட்டில் உள்ளடங்க வேண்டிய காசுப் பாய்ச்சல் கூற்று, கடன் மீள்செலுத்தும் திட்டம், நாளாதுவரையாக்கப்பட்ட நிறுவன கட்டமைப்பு, அங்கீகார ஆளணி மற்றும் உள்ளவாரான ஆளணி தொடர்பான விபரங்கள் உள்ளடங்கி இருக்கவில்லை. | 2019 ஆண்டு செயல் நடவடிக்கை திட்டம் மற்றும் விற்பனை திட்டத்தை கணக்காய்விற்காக முன்வைக்கப்பட்டுள்ளது. இதற்கு மேலதிகமாக விற்பனை உருப்படிகள் மற்றும் விற்பனை நிலையங்கள் பிரகாரம் விற்பனை திட்டம் கணக்காய்விற்காக முன்வைக்கப்பட்டுள்ளன. | சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | PED 1/2015 ஆம் இலக்க 2015 மே 25 ஆந் திகதிய பொது முயற்சிகள் திணைக்கள சுற்றறிக்கையின் 2.1 பந்தி | தவிசாளர் கடமை மற்றும் தனிப்பட்ட பயன்பாட்டிற்காக ஒரு உத்தியோகபூர்வ வாகனத்தை மாத்திரம் பெற்றுக் கொள்ள உரிமை உடைய போதும், 2017 சனவரி 01 திகதி முதல் மே 13 திகதி வரை மூன்று வாகனங்களையும் 2018 மே | கருத்துத் தெரிவிக்கப்படவில்லை. | சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

14 திகதி முதல் இது வரை நான்கு வாகனங்களுமாக தவிசாளரிற்காக ஒதுக்கப்பட்டிருந்தன.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டில் வரிக்கு முன்னரான செயற்பாட்டு விளைவுகள் ரூபா 1,617,810,304 ஆன நட்டமொன்றானதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் நட்டம் ரூபா 427,887,159 ஆனது. அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 1,189,923,145 ஆன நட்ட அதிகரிப்பு அவதானிக்கப்பட்டது. இவ் வீழிச்சிக்கு நிதிசார் கிரயம் அதிகரித்தமை முக்கிய காரணமாக இருந்தது.

### 2.2 விகிதப் பகுப்பாய்வு

மீளாய்வாண்டில் நடைமுறை சொத்து விகிதம், துரித சொத்து விகிதம், மொத்த இலாப விகிதம் முறையே 0.17 ஆக 0.11 ஆக மற்றும் 19 ஆனதுடன் முன்னைய ஆண்டில் அவ் விகிதங்கள் முறையே 0.25 ஆக 0.17 ஆக மற்றும் 27 ஆக இருந்தது. அதன் பிரகாரம் இவ் விகிதங்களில் வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டதுடன் நடைமுறை சொத்து விகிதம், துரித சொத்து விகிதம் பழவீனமான நிலையில் உள்ளதால் தொழிற்பாட்டு மூலதன பிரச்சினைக்கு முகம் கொடுத்துள்ளதாக அவதானிக்கப்பட்டது. மேலும் மொத்த இலாப விகிதம் குறைவதற்கு விற்பனை வருமானம் குறைந்தமை காரணமாக இருந்தது.

## 3 செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | சபையினால் 1974 மற்றும் 1992 ஆகிய ஆண்டுகளிலிருந்து நடாத்தி வரும் 24 பண்ணைகளுக்குரிய காணிகளின் உரிமை காணி மறுசீரமைப்பு ஆணைக்குழு மற்றும் அரசிற்கு சொந்தமாவதுடன் முறையாக சுவீகரித்துக் கொள்ளாது, 2016 திசெம்பர் 31 திகதியளவில் அவற்றில் ரூபா 194,565,192 பெறுமதயான கட்டிடங்கள் மற்றும் ரூபா 701,358,733 பெறுமதியான கட்டமைப்புகள் நிர்மாணிக்கப்பட்டிருந்தன. | காணிகள் மற்றும் கட்டிடங்களின் உரிமையை சுவீகரிக்க காணி மறுசீரமைப்பு ஆணைக்குழு மற்றும் காணி ஆணையாளர் நாயகத்திடம் கோரப்பட்டுள்ளன. | காணிகளின் உரிமையை சுவீகரித்துக் கொள்ள வேண்டும். |
| (ஆ) | சபையினால் ஏனைய அமைச்சுகளிற்குரிய 42 வாகனங்கள், கொவுள்வெவ தனியார் கம்பனிக்குரிய 01 வாகனம், காணி மீட்பு ஆணைக்குழுவிற்குரிய 02 வாகனங்கள், கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களத்திற்கு உரிய 09 வாகனங்கள், இலங்கை கோழிகள் கட்டுபாட்டு அபிவிருத்தி தனியார் கம்பனிக்குரிய 05 | தொடர்புடைய வாகனங்களின் பதிவுரிமையை பணம் செலுத்தாது சபைக்கு சுவீகரிக்கும் இயலுமை பற்றி கொம்ரோல நாயக அலுவலகத்தில் விபரங்களை விசாரித்ததுடன் பொது முயற்சிகள் | ஏனைய அமைச்சுகளிற்கு மற்றும் நிறுவனங்களிற்குரிய வாகனங்களின் சட்டரீதியான உரிமையை பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வாகனங்களுமாக ஏனைய நிறுவனங்களிடமிருந்து பெற்றுக் கொண்ட வாகனங்களை ஓட்டத்திற்கு ஈடுபடுத்தியிருந்த போதும் அவ் வாகனங்களின் சட்டரீதியான உரிமையை பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | திணைக்களத்திடமும் விபரங்கள் விசாரிக்கப்பட்டது. இலங்கை கோழிகள் கட்டுபாட்டு அபிவிருத்தி தனியார் கம்பனி தேசிய கால்நடை வள அபிவிருத்தி சபையின் இணைந்த கம்பனியாக காணப்பட்டதுடன் அதன் போது சபைக்கு சொந்தமான பண்ணை ஒன்றாகும். இந் நிறுவனத்தினால் சபையின் பண்ணைகளின் மேற்பார்வை நடவடிக்கைகளுக்காக 253-4140, 253-4141 மற்றும் CAC-7973 கொண்ட வாகனங்கள் மாத்திரம் பெறப்பட்டுள்ளன. | |
| (இ) | 2015 யூலை 16 ஆந் திகதிய அமப/15/0940/631/018-1 ஆம் இலக்க அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் வ/ப மகாவலி கால்நடை வியாபாரக் கம்பனிக்கு சொந்மான அனைத்து வளங்களும், சொத்துக்கள், பங்குகள் மற்றும் முகாமைத்துவம் உரிய சட்ட செயற்பாடுகளின் கீழ் தேசிய கால்நடை வள அபிவிருத்தி சபையை கையேற்க வேண்டுமென அறிவிக்கப்பட்டுள்ளது. எனினும் 2020 ஆகஸ்ட் 25 ஆம் திகதி வரை கம்பனியின் பங்கு உரிமையின் 27 சதவீதம் மாத்திரம் தேசிய கால்நடை வள அபிவிருத்தி சபை கையேற்றிருந்ததுடன் ஏனைய பங்கு உரிமையை சபைக்கு கையேற்க தேவையான சட்ட செயற்பாடுகளை பின்பற்றவில்லை என அவதானிக்கப்பட்டது. | வ/ப மகாவலி கால்நடை வியாபாரக் கம்பனியின் மூலதன பங்குகளில் வ/ப மகாவலி அதிகார சபை 45% உம் தேசிய கால்நடை வள அபிவிருத்தி சபை 27% உம் நெதர்லாந்த அபிவிருத்தி நிதி கம்பனி – பங்கு வீதம் 23% கோழிகள் கட்டுப்பாட்டு விவசாயிகள் 5% உம் ஆகும். இக் கம்பனியின் பண்ணை நடவடிக்கைகளை நடாத்திச் செல்லும் காணி மகாவலி அபிவிருத்தி அதிகார சபைக்கு சொந்தமாகும். கம்பனிக்கு எதிராக வெளித்தரப்பினரால் கடன் தொகை பெற்றுக் கொள்ள வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இவ் விடயம் காரணமாக இக் கம்பனியை கலைத்து தேசிய கால்நடை | அமைச்சரவை தீர்மானம் பிரகாரம் அனைத்து பங்குகளையும் சுவீகரித்திற்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | அபிவிருத்தி சபையின் பண்ணையொன்றாக சுவீகரிக்க முடியாதுள்ளது. | |
| (ஈ) | வ/ப இலங்கை கோழிக் கட்டுப்பாட்டு அபிவிருத்தி (தனியார்) கம்பனியின் நிலையான சொத்துக்கள் பதிவேட்டை நாளாதுவரையாக பேணிச் செல்லாததால் மீளாய்வாண்டிற்குரிய நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள ரூபா 2,785,767 ஆன பெறுமானத் தேய்வு ஏற்பாடு மற்றும் ஆதன பொறிகள் மற்றும் உபகரணங்களில் தேறிய பெறுமானம் ரூபா 82,868,230 ஆன மீதிகளின் சரியான தன்மையை கணக்காய்வின் போது திருப்திகரமாக ஆய்வு செய்ய முடியவில்லை. | சரியான நிலையான சொத்துக்கள் பதிவேடொன்றை பேணிச் செல்ல எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | நிலையான சொத்துக்கள் பதிவேட்டை நாளாதுவரையாக பேணிக் கொள்ள வேண்டும். |
| (உ) | தென்னை கருத்திட்ட வருமானத்தை கவனிக்கையில் 05 பண்ணைகளின் தென்னை வருமானம் கூட்டிணைந்த திட்டத்தில் கைவிடப்பட்டிருந்ததுடன் செலவுகளை கவனிக்கையில் 06 பண்ணைகளின் செலவுகள் கூட்டிணைந்த திட்டத்தில் கைவிடப்பட்டிருந்தன. | பொலன்தலாவ பண்ணையின் வருமானம் தென்னை கருத்திட்டத்தின் கீழும் வெலிசர பண்ணையின் வருமானம் பன்றி கருத்திட்டத்தின் கீழும் காட்டப்பட்டுள்ளன. | கூட்டிணைந்த திட்டத்திற்கு அனைத்து பண்ணைகளினதும் வருமானங்கள் உள்ளடக்கப்பட வேண்டும். |
| (ஊ) | சபையின் கால்நடை வள கருத்திட்டத்திற்குரிய செலவிற்காக செயல் நடவடிக்கை திட்டதில் ஒதுக்கியுள்ள பெறுமதிக்கு அதிகமாக பாதீட்டில், 12 பண்ணைகளின் கூட்டுத் தொகை ரூபா 72,147,214 தொகை கூடுதலாவும் 16 பண்ணைகளின் கூட்டுத் தொகை ரூபா 158,003,334 தொகை குறைவாகவும் காட்டப்பட்டுள்ளதாக அவதானிக்கப்பட்டது. | கருத்துத் தெரிவிக்கப்படவில்லை. | செயல் நடவடிக்கை திட்டத்தில் செலவுகள் மற்றும் பாதீட்டின் செலவுகள் இணங்க வேண்டும். |
| (எ) | கணக்கு பிரிவின் உதவி பொது முகாமையாளர், முகாமையாளர் மற்றும் உதவி முகாமையாளர் ஆகிய மூன்று பதிவிகள் 2017 ஆண்டிலிருந்தும் உதவி பொது முகாமையாளர் (மனிதவன மற்றும் கட்டுப்பாடு) பதவிகள் 2016 சனவரி மாதத்திலிருந்தும் முகாமையாளர் (நிதி) பதவி 2016 ஒக்டோபர் மாதம் 25 திகதி முதலும் மேற்பார்வை மற்றும் இயக்க முகாமையாளர் பதவி 2016 செப்டம்பர் 03 திகதி முதலும், உதவி முகாமையாளர் (நிதி) பதவி 2015 திசெம்பர் 01 திகதி முதலும், மேற்பார்வை மற்றும் இயக்க உதவி | உதவி பொது முகாமையாளர் (நிதி) பணிப்பாளர் சபையொன்று நியமிக்கப்பட்ட பின்னர் ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்படும்.<br><br>முகாமையாளர் (நிதி) அதற்காக வெற்றிடத்திற்கு அலுவலர் ஒருவர் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளார். | வெற்றிட பதவிகளை நிரப்ப அல்லது அங்கீகார ஆளணி எண்ணிக்கையை திருத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | முகாமையாளர் பதவி 2011 ஆகஸ்ட் 25 திகதி முதலும் வெற்றிடமாக காணப்பட்ட போதும் அப் பதவிகளை நிரப்ப நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | உதவி முகாமையாளர் (நிதி) 2018.10.01 திகதி பதவியில் வெற்றிடம் நிரப்பப்பட்டுள்ளது.<br><br>உதவி பொது முகாமையாளர் (மனிதவள மற்றும் கட்டுப்பாடு) அப் பதவியின் வெற்றிடம் நிரப்பப்பட்டுள்ளது. எமது அங்கீகார ஆட்சேர்ப்பு திட்டத்திற்கு அமைய முகாமையாளர் (மேற்பார்வை மற்றும் இயக்க) பதவி வெற்றிடத்திற்காக ஆட்சேர்க்க முடியாததுடன், உதவி முகாமையாளர் (மேற்பார்வை மற்றும் இயக்க) பதவி வெற்றிடம் தற்போது நிரப்பப்பட்டுள்ளது. | |
| (ஏ) | ஐக்கிய நாடுகள் சபையினால் 2030 இல் தமது சபைக்கு சொந்தமான அனைத்து நாடுகளினதும் பொருளாதார வளர்ச்சி மற்றும் சமூக அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் பாதுகாப்பை வழங்குதலை அடிப்படையாக் கொண்டு நிலைபேறான அபிவிருத்தி நிகழ்சி நிரலை அறிமுகப்படுத்தியிருந்த போதும், அதற்கு உரியவாறு எதிர்பார்த்த நோக்கங்கள், இலக்குகள் மற்றும் குறிகாட்டிகளை இனங்கண்டிருக்கவில்லை. | தற்போது SCI (பொது நிறுவனரீதியான அபிப்பிராய பதிவேடு) ஊடாக சபையின் எதிர்பார்த்த நோக்கம் இலக்கு மற்றும் குறிகாட்டிகளை இனங்கண்டு உள்ளடக்கியுள்ளதுடன் 2021 – 2025 ஆண்களிற்காக தயாரிக்கப்பட்ட கூட்டிணைந்த திட்டத்திலும் உள்ளடக்கப்பட்டுள்ளது. | எதிர்பார்த்த நோக்கம் இலக்கு மற்றும் குறிகாட்டிகளை இனங்காண வேண்டும். |
| (ஐ) | 1993 ஆண்டு முதல் மீளாய்வாண்டு 31 திகதி வரை காணிகள் தொடர்பாக வெளித்தரப்பினரால் தாக்கல் செய்த வழக்குகள் 05 உம் சபையினால் சோளம் விற்பனைக்காக ரூபா 11,947,220 ஆன தொகையை அறவிடுவது தொடர்பாக குறித்த தரப்பினருக்கு எதிராக வழக்கொன்றும் ஆக வழக்கு நடவடிக்கைகள் விசாரிக்கப்படுகின்றது. | 2018 ஆண்டில் காணி தொடர்பான 05 வழக்குகள் நீதிமன்றத்தில் விசாரிக்கப்பட்டுக் கொண்டிருந்த, கந்தலாய் மாவட்ட நீதிமன்றத்தில் எக்ரோடிரேடிங் லங்கா பிரய்வட் லிமிடட் கம்பனிக்கு எதிராக | அறவிட வேண்டிய தொகையை மற்றும் செலுத்த வேண்டிய தொகையை விரைவில் தீர்க்க வேண்டும். சட்ட நடவடிக்கைகளுக்கு செல்லும் சந்தர்ப்பங்களை குறைத்துக் கொள்ள வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | தாக்கல் செய்யப்பட்ட N/52/2012 வழக்கு தீர்ப்பின் பிரகாரம் ரூபா 11,974,220 ஆன தொகையை அறவிட தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. கம்பனி செயலற்றுள்ளதால் அறவிட கூடிய இயலுமை இல்லை. | |
| (ஓ) | கந்தளாய் கரும்பு பயிர்ச் செய்கை நிலத்தில் அமைந்துள்ள 1,000 ஏக்கர் காணியை கிழக்கு உதயத்தின் கீழ் சுழற்சி நிதியமொன்றின் மீது செயற்படும் சோளக் கருத்திட்டம் ஒன்றை நிருவ 2007 யூன் 28 ஆந் திகதி பொது திறைசேரியினால் ரூபா 37.55 மில்லியன் சபைக்கு வழங்கப்பட்டிருந்தது. அக் கருத்திட்டம் தோல்வியடைந்தமையால் 2011 செப்தெம்பர் 11 ஆந் திகதி காணியை மீண்டும் கந்தளாய் சீனிக் கம்பனிக்கு கையளித்த சந்தர்ப்பத்தில் சுழற்சி நிதியத்தில் காணப்பட்ட ரூபா 17,549,342 தொகையை பொது திறைசேரிக்கு அனுப்ப வேண்டுமென 2007 யூன் 20 ஆந் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்தின் குறிப்பிட்டிருந்த போதிலும், அதற்கு மாற்றமாக ரூபா 13,295,637 தொகையை 2011 ஆம் ஆண்டு முதல் அரச வங்கியொன்றில் நிலையான வைப்பின் கீழ் முதலீடு செய்யப்பட்டிருந்தது. | சபையில் காணப்படும் கடுமையான நிதி நெருக்கடி காரணமாக இத் தொகையை செலுத்து இயலாதுள்ளது. எதிர் காலத்தில் இது தொடர்பாக பொது முயற்சிகள் திணைக்களத்துடன் கலந்துரையாடி செலுத்த நடவடிக்கை எடுக்கிறேன். | அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஓ) | கருத்திட்ட சாத்தியப்பாட்டு ஆய்வு அறிக்கை பிரகாரம் இறக்குமதி பசு மாட்டு கருதிட்டத்தை ஆரம்பித்த பின்னர் இரண்டாம் ஆண்டு முதல் இலாபம் ஈட்டுவதாகவும், 4 ஆம் ஆண்டு முதல் இலாபம் படிப்படியாக 10 ஆண்டு வரை அதிகரிப்பதாகவும் குறிப்பிட்டிருந்த போதும் 2012 மற்றும் 2013 ஆண்டுகளில் இறக்குமதி செய்த பசு மாடுகளை கட்டி வைத்துள்ள மெனிக்பாலம, டயகம மற்றும் போபத்தலாவ ஆகிய பண்ணைகள் 2016 ஆண்டு முதல் 2018 ஆண்டு வரை தொடர்ந்தும் நட்டமடைந்துள்ளதுடன் 2015 ஆண்டில் இறக்குமதி செய்த பசு மாடுகளை கட்டி வைத்துள்ள ரிதியாகம பண்ணையில் 2017 மற்றும் | இக் கால்நடைகளை இந் நாட்டிற்கு கொண்டுவருகையில் சாத்தியப்பாட்டு ஆய்வுவொன்றை தேசிய கால்நடை வள அபிவிருத்தி சபையினால் மேற்கொள்ளப்படவில்லை. | கருத்திட்ட சாத்தியப்பாட்டு ஆய்வை சரியாக மேற்கொள்ள வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | 2018 ஆண்டுகளில் தேறிய நட்டம் முறையே ரூபா 8 மில்லியன் மற்றும் 165 ஆக இருந்தது. அதன் பிரகாரம் அச் சாத்தியப்பாட்டு ஆய்வு அறிக்கை சரியானதல்ல எனவும் கருத்திட்டம் தோல்வியானது எனவும் அவதானிக்கப்பட்டது. | | |
| (ஔ) | 1966 ஆண்டு முதல் 2018 ஆண்டு வரை கொள்வனவு செய்த 14 மோடார் சைக்கில்கள், 04 முச்சக்கர வண்டிகள், 04 மிட்சுபிசி டபல் கெப்கள், 03 டெக்டர்கள் மற்றும் 01 மிட்சுபிசி பெஜரோவும் செலுத்துவதற்கு பொருத்தமான நிலையில் இல்லாததாக அவதானிக்கப்பட்டன. அவற்றில் தற்போது ஓட்டத்திலிருந்து அகற்றியுள்ள 14 மோடார் சைக்கில்கள் மற்றும் 4 முச்சக்கர வண்டிகளை பராதீனம் செய்யவும் 2 டெக்டர்களை திருத்தி ஓட்டுவதற்கும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | 54-3419, 54-3415, 51-1088 மற்றும் 54-3420 கொண்ட L-200 டபல் கெப் 04 வண்டிகள் மற்றும் 32-0743 கொண்ட மிட்சுபிசி பெஜரோ ஜீப் வண்டியை சுற்றறிக்கை பிரகாரம் பராதீனம் செய்துள்ளதுடன் 14 மோடார் சைக்கில்களின் பதிவுரிமையை தீர்த்துக் கொண்ட பின்னர் 04 முச்சக்கர வண்டிகளுடன் பராதீனம் செய்ய நடவடிக்கை எடுப்பதுடன் மூன்று டெக்டர்களை திருத்தி ஓட்ட தீர்மானிக்கப்பட்டு உள்ளதுடன், 37-6865 கொண்ட டெக்டர் வண்டியை தற்போது திருத்தி ஓட்டத்தில் ஈடுபடுத்தப்பட்டுள்ளது. | சபைக்கு சொந்தமான வாகனங்களை ஆக்கப்பூர்வமாக பயன்படுத்த வேண்டும். |
| (க) | தாபன விதிக்கோவையின் II ஆம் அத்தியாயத்தின் 9:1 உபபிரிவின் பிரகாரம் இளைப்பாறிய அலுவலர் ஒருவர் மீளப் பணிக்கமர்த்துவதற்கு அமைச்சரவையின் முன் அங்கீகாரம் பெறப்படுதல் கட்டாயமாவதுடன் பீஈடீ/12 கொண்ட 2003 யூன் 02 ஆம் திகதிய பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 9.10 உப பந்தியின் பிரகாரம் ஒப்பந்த அடிப்படையில் அல்லது அமைய அடிப்படையில் மீது ஆட்சேர்ப்பதற்காக மற்றும் கொடுப்பனவிற்கு பொது திறைசேரியின் செயலாளரின் முன்கூட்டிய அனுமதி பெற்றுக்கொள்வது கட்டாயமாவதுடன் அவ்வாறான அங்கீகாரமின்றி முன்னைய பொது முகாமையாளர் இளைப்பாறிய பின் அதாவது 2018 சனவரி 16 ஆம் திகதி முதல் 2019 சனவரி வரை அப் பதவியில் பதிற் | 2017 நவம்பர் 23 ஆம் திகதி பத்திரிகை விளம்பரம் ஒன்று ஊடாக மற்றும் உள்ளக விண்ணப்பதாரர்களிடமிருந்து பொது முகமையாளர் பதவிற்காக விண்ணப்பம் கோரப்பட்டதுடன், பதவிற்காக தகைமை பூர்த்தி செய்துள்ள ஒரு விண்ணப்பம் ஏனும் இல்லாதிருந்ததால் பணிப்பாளர் சபை அங்கீகாரத்தின் கீழ் அப்பதவியில் பதிற் கடமைக்காக அச்சந்தர்ப்பத்தில் முன்னால் பொது முகாமையாளர் அவர்களுக்கு ஓராண்டு | தாபன விதக்கோவை மற்றும் குறித்த சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கடமைக்காக பணிப்பளர் சபையினால் நியமிக்கப்பட்டிருந்தது. | காலத்திற்காக ஒப்பந்த அடிப்படையின் மீது நியமனம் வழங்ப்பட்டது.<br><br>தேசிய கால்நடை வள அபிவிருத்தி சபை நிருவப்பட்ட 1972 இன் 11 இலக்க விவசாய அரச கூட்டுத்தாபன சட்டத்தின் 5.2(b) பிரிவின் கீழ் பணிப்பாளர் சபைக்கு ஒப்படைத்துள்ள அதிகாரத்தின் பிரகாரம் ஒப்பந்த அடிப்படையின் மீது ஆட்சேர்க்கப்பட்ட பொது முகாமையாளரின் ஒப்பந்த படிகளை தீர்மானித்து வழங்கப்பட்டுள்ளது. | |
| (கா) | 2016 சனவரி மாதம் 31 திகதி வேலைத் தடைக்குட்பட்ட பிரதி பொது முகாமையாளர் (கூட்டுத்தாபன மற்றும் இயக்கம்) 2017 திசெம்பர் 12 திகதி முதல் மீளப் பணிக்கமர்த்தி இருந்ததுடன் 2017 ஒக்டோபர் 17 திகதி முதல் அப் பதவியில் பதிற் கடமைக்கு நியமித்த அலுவலரின் இரத்துச் செய்ய வேண்டிய போதும் அவ்வாறு செய்யாது பதிற் கடமை படிகளாக 2017 திசெம்பர் மாதம் 12 முதல் 2018 திசெம்பர் 31 வரை ரூபா 54,000 செலுத்தப்பட்டிருந்தது. | புதிய கருத்திட்ட மேற்பார்வைக்காக களத்தில் ஈடுபடுத்தி இருந்த பதிற் கடமை பிரதி முகாமையாளரை அகற்றாது கடமையில் ஈடுபடுத்தப்பட்டார். பிரதி பொது முகாமையாளர் (கூட்டுத்தாபன மற்றும் இயக்கம்) பதவி பிரதான அலுவலக பதவியொன்றாவதுடன், அப் பதவியில் கடமைப் பொறுப்பாக கள செயற்பாடுகளில் ஈடுபடுதல் ஒப்படைக்கப்பட்டவில்லை என அறிவிக்கிறேன். | பதிற் கடமை படிகளை வழங்கும் போது சட்ட விதிகள் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | கரந்தகொள்ள பண்ணையின் இருப்புக் கணிப்பீட்டு அறிக்கை பிரகாரம் பொது இருப்பினுள் ரூபா 513,387 பெறுமதியான மெதுவாக அசையும் இருப்புக்கள் காணப்படுவதாக அவதானிக்கப்பட்டது. | சில உருப்படிகள் பண்ணையின் தேவைப்பாட்டின் மீது கொள்வனவு செய்யப்பட்டுள்ளதுடன் அவ் உருப்படிகளை தேவைக்கு ஏற்ப பயன்படுத்துவதால் | மெதுவாக அசையும் இருப்புக்கள் காலாவதியாக முன்னர் பயன்படுத்த வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | இதனால் சபைக்கு எவ்வித நட்டமும் ஏற்படுவதில்லை. | |
| (ஆ) | பண்ணைகள் கணக்கின் பிரகாரம், இறக்குமதி செய்யப்பட்ட பசுமாட்டு கருத்திட்டம் செயற்படுத்தப்படும் 04 பண்ணைகளை கவனிக்கையில் அப் பண்ணைகளில் மிருக உணவுச் செலவு பால் வருமானத்தின் 69 சதவீதமானதுடன் ஏனைய பசுமாட்டுக் கருத்திட்டங்களுடன் கூடிய 18 பண்ணைகளில் மிருகஉணவுச் செலவு பால் வருமானத்தின் 47 சதவீதமானது. மேலும் எருமை மாட்டு கருத்திட்டம் செயற்படுத்தப்படும் 04 பண்ணைகளின் மிருக உணவு செலவு பால் வருமானத்தின் 32 சதவீதமானது. அதன் பிரகாரம் மாடுகளின் உணவிற்காக மேற்கொண்ட செலவுகளை மாத்திரம் கவனிக்கையில் இறக்குமதி செய்யப்பட்ட பசுமாட்டு கருத்திட்டம், தேசிய மற்றும் கலப்பு பசுமாட்டு கருத்திட்டம் மற்றும் எருமை மாட்டு கருத்திட்டங்களிற்கு இடையில் எருமை மாட்டுக் கருத்திட்டம் அதிக இலாபகரமானதாக அவதானிக்கப்பட்ட போதும் எருமை மாட்டுக் கருத்திட்டம் தொடர்பில் விஷேட கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. | கருத்துத் தெரிவிக்கப்படவில்லை. | சபை கூடிய இலாபகரமான கருத்திட்டங்களில் ஈடுபட வேண்டும். |
| (இ) | தொகை மதிப்பு மற்றும் புள்ளி விபரவியல் திணைக்களத்தின் மற்றும் மத்திய வங்கி ஆண்டறிக்கை பிரகாரம் மீளாய்வாண்டில் நாட்டின் மொத்த பால் உற்பத்தி 391,530,600 லீட்டர் உம் தென்னை உற்பத்தி 2,623,000,000 காய்களும் கோழி உற்பத்தி விலங்குள் 24,277,830 உமானதுடன், அவற்றில் தேசிய கால்நடை வன அபிவிருத்தி சபையின் பால் உற்பத்தி 14,002,607 லீட்டரும் தென்னை உற்பத்தி 12,990,883 காய்களும் கோழி உற்பத்தி விலங்குள் 3,070,823 மாத்திரமே ஆனது. அதன் பிரகாரம் தேசிய உற்பத்திற்கு சபையின் பங்களிப்பு | தற்போது சபைக்கு சொந்தமான பால் மாட்டுகளின் எண்ணிக்கை தென்னை காணியின் அளவு மற்றும் இனவிருத்தி கோழிகளிகளின் கொள்ளளவின் மீது சபையின் மொத்த பங்களிப்பு தீர்மானிக்கப்பட்டுள்ளது. | சபையின் உற்பத்தி பிரகாரம் தேசிய உற்பத்திக்கான பங்களிப்பை அதிகரித்துக் கொள்ள வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பால் உற்பத்தியில் 3.6 வீதம், தேங்காய் உற்பத்தியில் 0.5 வீதம் மற்றும் கோழிகள் உற்பத்தியில் 12.6 சதவீதமுமான ஆகக் குறைந்த மட்டத்தில் நிலவியன. | | |
| (ஈ) | கோழி உணவிற்காக தேசிய கால்நடை வள அபிவிருத்தி சபையின் கீழ் 12 பண்ணைகளுக்கு 2,319 மெட்ரிக் டொன்களும், இலங்கை கோழிகள் கட்டுப்பாட்டு அபிவிருத்தி (தனியார்) கம்பனிக்கு 559.6 மெட்ரிக் டொன்களும், மகாவலி கால்நடை வியாபார கம்பனிக்கு 1,674.7 மெட்ரிக் டொன்களுமாக ஓராண்டிற்கு கூட்டுத் தொகை 4,553.3 மெட்ரிக் டொன்களுக்கு ரூபா 248.77 மில்லியன் 3 தனியார் கம்பனிகளுக்கு செலுத்தியிருந்தன. 2018 ஆண்டில் இச் செலவு ஒவ்வொறு நிறுவனங்களினதும் மொத்த வருமானத்தில் முறையே 39 சதவீதம், 64 சதவீதம் மற்றும் 54 சதவீதமானது. | கோழிகள் கட்டுப்பாட்டின் போது கால்நடை உணவிற்காக 80% பணம் செலவாவதுடன் அந்த அந்த பண்ணைகளிலுள்ள கால்நடைகளின் வயது குழுக்களை போன்று. கால்நடைகளின் எண்ணிக்கை பிரகாரம் உணவு கொள்வனவு வித்தியாசப்பட முடியும். அதன் பிரகாரம் அவ் ஆண்டில் அந்த அந்த நிறுவனங்களில் இருந்த கால்நடைகளின் எண்ணிக்கை, கால்நடைகளின் வயது வித்தியாசமாவதில் மேற் குறிப்பிட்ட செலவினம் அறிக்கையிடப்படுகிறது. | கோழி உணவிற்காக சபைக்கு சொந்தமான இயந்திரங்களை பயன்படுத்துவதன் ஊடாக செலவினத்தை குறைத்துக் கொள்ள செயற்பட வேண்டும். |
| (உ) | இறக்குமதி மாடுகள் உள்ள 04 பண்ணைகளில் 2018 ஆண்டில் நேர் செலவு ரூபா 1.068 மில்லியன் ஆனதுடன் ஒவ்வொறு பண்ணைகளுக்கும் நேர் செலவுகள் செய்த பின்னர் மொத்த நட்ட கூட்டுத் தொகை ரூபா 133 மில்லியன் மற்றும் ரிதியகம பண்ணையின் மொத்த இலாபம் ரூபா 5 மில்லியனாக இருந்தது. அதன் பிரகாரம் இப் பண்ணைகளுக்காக குறைந்த பட்சம் நேர் செலவுகளையேனும் ஈடுசெய்து கொள்ள முடியாத நிலையொன்று உள்ளதாக அவதானிக்கப்பட்டது. | ரிதியகம் பண்ணை ஆரம்பிக்கப்பட் திகதி முதல் இது வரை நட்டமடையும் பண்ணை ஒன்றாவதுடன் சுற்றாடல் நிலையை சமநிலையாக்க பாரிய செலவை மேற்கொண்டு அவ் கால்நடைகளின் பட்டிகளில் வெப்ப நிலையை கட்டுப்படுத்தல் போன்ற விடயங்களை மேற்கொள்கையில் மின் பட்டியல் போன்று கால்நடைகளை பராமரிக்க ஏனைய செலவுகளை கவனிக்கையில் வருமானம் ஈட்ட முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இவ் கால்நடைகளை இந் நாட்டிற்கு கொண்டுவரும் போது சாத்தியப்பாட்டு ஆய்வொன்றை தேசிய கால்நடை வள அபிவிருத்தி சபையினால் மேற்கொள்ளப்படவில்லை. | சபையின் இறக்குமதி மாடுகள் உள்ள நட்டமடையும் பண்ணைகளை இலாபம் ஈட்டும் நிலைக்கு கொண்டுவர நடவக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஊ) | 2012/2013 மற்றும் 2015 ஆண்டுகளில் ரூபா 4,462 மில்லியனான வெளிநாட்டு கடன் செலவில் இறக்குமதி செய்யப்பட்ட 4,495 பசு மாடுகள் உள்ளடங்களாக 20 பண்ணைகளிலுள்ள அனைத்து பசு மாடுகளின் எதிர்பார்த்த பால் உற்பத்தி 2016 ஆண்டில் 24,745,729 லீட்டரும் 2017 ஆண்டில் 20,096,620 லீட்டரும் 2018 ஆண்டில் 20,031,372 லீட்டருமாகும். உள்ளவாராண பால் உற்பத்தி 2016 ஆண்டில் 17,147,819 லீட்டரும் 2017 ஆண்டில் 14,368,585 லீட்டரும் 2018 ஆண்டில் 14,002,607 லீட்டருமாகும். அதன் பிரகாரம் உள்ளவாராண பால் உற்பத்தி எதிர்பார்த்த பால் அளவிலும் 31 சதவீதம் 28.5 சதவீதம் மற்றும் 30 சதவீதம் குறைவடைந்திருந்தன. 04 பண்ணைகள் தொடர்பாக 2017 மற்றும் 2018 ஆண்டுகளில் மாட்டு உணவு செலவு பால் இலாபத்தில் 68 சதவீதம் மற்றும் 69 சதவீதமாக உள்ளதுடன் பால் கருத்திட்டத்தின் நேர் செலவை கழித்த பின்னர் நட்டம் 2017 ஆண்டில் ரூபா 220,040,086 தொகை மற்றும் 2018 ஆண்டில் ரூபா 411,526,157 ஆனது. | காலநிலை நிலைமைகளின் தாக்கம் மற்றும் சந்தையினுள் உணவு செலவு அதிகரித்தமை காரணமாக இருந்தன. | பால் உற்பத்தியை அதிகரித்துக் கொள்ள கருத்திட்ட நேர் செலவுகளை குறைத்துக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (எ) | தேசிய கால்நடை வள அபிவிருத்தி சபையின் 4 பண்ணைகளிற்கு சொந்தமாக ஒரு நாளைக்கு ஒரே தடவையில் 3.75 டொன் மாட்டு உணவு உற்பத்தி செய்ய முடியுமான 4 இயந்திரங்கள் 01 ஆண்டு முதல் 09 ஆண்டுகள் வரையான காலமாக செயலிழந்து காணப்படுகின்றன. | தற்போது ஹொரகெலே வீரவில, மிரிஸ்வத்த, கரந்தகொல்ல, கொட்டுகச்சிய, இலங்கை கோழிகள் வியாபார கம்பனி, மஹவலி கால்நடைகள் வியாபார கம்பனி ஆகிய இடங்களில் நிருவியுள்ள விலங்கு உணவு அரைக்கும் ஆலைகளினூடாக கோழிகள், மாடுகள் மற்றும் பன்றிகளிற்காக கால்நடை உணவுகளும் கனிப்பொருள் கலப்பும் உற்பத்தி செய்யப்படுகின்றன. | மாட்டு உணவு உற்பத்தி செய்ய முடியுமான இயந்திரங்களை பயன்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஏ) | தேசிய கால்நடை வள அபிவிருத்தி சபையின் கீழ் 3 | தற்போது ஹொரகெலே வீரவில, மிரிஸ்வத்த, | கோழி உணவு உற்பத்தி செய்ய |

| | | | |
|---|---|---|---|
| | பண்ணைகளுக்கு சொந்தமான கோழி உணவு தயாரிக்கும் 05 இயந்திரங்களும் மஹவலி கால்நடை வியாபார கம்பனிக்கு சொந்தமாக 01 இயந்திரமும் இலங்கை கோழிகள் கட்டுப்பாட்டு அபிவிருத்தி (தனியார்) கம்பனிக்கு சொந்தமாக 02 இயந்திரங்களுமாக ஓராண்டிற்கு கோழி உணவு 30,960 மெட்ரிக் டொன் உற்பத்தி செய்யும் இயலுமை உள்ள போதும் 2018 ஆண்டு இறுதியில் அவ் 8 இயந்திரங்கள் 01 ஆண்டு முதல் 09 ஆண்டுகள் வரையான காலமாக செயலிழந்து காணப்பட்டன. | கரந்தகொல்ல, கொட்டுகச்சிய, இலங்கை கோழிகள் வியாபார கம்பனி, மஹவலி விலங்குகள் வியாபார கம்பனி ஆகிய இடங்களில் நிருவியுள்ள கால்நடை உணவு அரைக்கும் ஆலைகளினூடாக கோழிகள், மாடுகள் மற்றும் பன்றிகளிற்காக விலங்குணவுகளும் கனிப்பொருள் கலப்பும் உற்பத்தி செய்யப்படுகின்றன. | முடியுமான இயந்திரங்களை பயன்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஐ) | தேசிய கால்நடை வள அபிவிருத்தி சபை, வ/ப மஹவலி விலங்குகள் வியாபார கம்பனி மற்றும் வ/ப இலங்கை கோழிகள் கட்டுப்பாட்டு அபிவிருத்தி (தனியார்) கம்பனி ஆகிய மூன்று கம்பனிகளுக்கு 12,617.43 ஹெக்டெயார் காணி சொந்தமாவதுடன் 2018 திசெம்பர் 31 திகதியன்று இக் காணி அளவின் கூட்டுத் தொகை 2,311.35 ஹெக்டெயார் பயன்படுத்தாது காணப்பட்டது. | பின்வரும் குறைபயன்பாட்டு காணிகள் விலங்கு உணவு உற்பத்திக்காக குருகிய கால குத்தகை ஒப்பந்தத்தின் மூலம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. 2021 ஆண்டில் குத்தகை வழங்கியுள்ள காணி அளவு சரசங்கஸ்வெவ, ஒயாமடுவ, மற்றும் வீரவில முறையே 500, 1000, 200 ஏக்கர்கள் ஆவதுடன் 2022 ஆண்டில் குத்தகை வழங்கியுள்ள காணி அளவு பரசங்கஸ்வெவ, ஒயாமடுவ, வீரவில, கொட்டுகச்சிய, நிகவெரடிய மற்றும் மரதவில முறையே 980, 826, 150, 150, 250, 100 ஏக்கர்களாகும். | குறைபயன்பாட்டு காணிகளை பயனுள்ளதாக பயன்படுத்த வேண்டும். |

**3.3 பெறுகைகள் முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | 2017 மார்ச் 15 திகதிய குறைநிரப்பு 33 இல் திருத்திய பெறுகைகள் வழிகாட்டி கோவையின் 2.14.1 பந்தி பிரகாரம் 100 மில்லியனிலும் கூடிய கொள்வனவுகள் | ஓராண்டிற்கு பல முறை மாட்டு உணவு கொள்வனவு செய்யப்படுவதுடன் அக் கொள்வனவு சந்தர்ப்பத்தில் குறித்த மாட்டு | பெறுகைகள் வழிகாட்டிக் கோவை பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட பெறுகைகள் குழுவினால் மேற்கொள்ள வேண்டிய போதும் சபைக்குரியதாக மீளாய்வாண்டில் ரூபா 794,241,795 பெறுமதியான மாட்டு உணவு கொள்வனவு சபையின் பெறுகைகள் குழுவினால் மேற்கொள்ளப்பட்டுள்ளது. | உணவுகளின் மொத்த பெறுமதி 100 மில்லியனை விஞ்சாததால் சபையின் பெறுகைகள் குழு ஊடாக கொள்வனவு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | |
| (ஆ) | 2018 ஆண்டில் ரிதியாகம, மெனிக்பாளம மற்றும் சபையின் ஏனைய 19 பண்ணைகளிற்குரிய மாட்டு உணவு கொள்வனவு மாதிரி பரிசோதனையின் போது முறையே ரூபா 84,222,564 தொகை, ரூபா 62,486,124 தொகை மற்றும் ரூபா 335,447,092 தொகை தனியார் வழங்குனர்களுக்கு செலுத்தியுள்ளதுடன் இரசாயன பசளை கொள்வனவிற்காக ரூபா 46,108,867 தொகை தனியார் வழங்குனர்களுக்கு செலுத்தப்பட்டு இருந்தது. இப் பெறுகைகள் நடவடிக்கை தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன. | | |
| (i) | பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 4.3 பிரகாரம் மொத்த கிரய மதிப்பீடொன்று மற்றும் பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 4.2.2 மற்றும் 4.2.3 பிரகாரமான பெறுகைகள் கால அட்டவணை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | பசளை கொள்வனவிற்கு கிரய மதிப்பீடொன்றை தயாரித்து எதிர்காலத்தில் 4.3 கீழ் மொத்த கிரய மதிப்பீடொன்றை மற்றும் 4.2.2 மற்றும் 4.2.3 கீழ் பெறுகைகள் கால அட்டவணை ஒன்றை தயாரிக்க நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். | பெறுகைகள் வழிகாட்டிக் கோவை பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ii) | பெறுகைகள் வழிகாட்டிக் கோவை 8.8.1 பிரகாரம் சபையினால் பெறுகைகளுக்கு தெரிவு செய்யாத வழங்குளர்களுக்கு தெரிவு செய்யாமைக்கான காரணத்தை தெரிவித்து கடிதம் அனுப்ப வேண்டிய போதும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | 2022 ஆண்டு ஆரம்பம் முதல் மேற்கொள்ளப்படும். | பெறுகைகள் வழிகாட்டிக் கோவை பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (iii) | பெறுகைகள் வழிகாட்டிக் கோவை 5.4.8 பிரகாரம் தெரிவு செய்த வழங்குளர்களினால் | கால்நடை உணவு கொள்வனவு குருகிய காலத்தில் | பெறுகைகள் வழிகாட்டிக் கோவை பிரகாரம் |

| | | | |
|---|---|---|---|
| | செயலாற்றுகை காப்பு சமர்பிக்க வேண்டிய போதும் அவ்வாறு செயலாற்றுகை காப்பை பெற்றுக் கொள்ள சபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | மேற்கொள்வதனாலும் கால்நடை உணவு வழங்கலிற்கு வழங்குனர்களுக்கு செலுத்த வேண்டிய பாரிய நிலுவைத் தொகை இருந்ததால் குறித்த வழங்குனர்கள் செயலாற்றுகை காப்பை வழங்க மறுத்தனர். 2022 ஆண்டு முதல் செயலாற்றுகை காப்பை சமர்பிக்காததற்கான காரணத்தை எழுத்து மூலம் குறித்த வழங்குனரிடமிருந்து பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (iv) | பெறுகைகள் வழிகாட்டிக் கைநூல் 8.9.3 மற்றும் 8.9 பிரகாரம் பண்ணைகளுக்காக மாட்டு உணவு கொள்வனவு செய்தல் மற்றும் சபையின் பண்ணைகளுக்கு பசளை கொள்வனவு செய்தல் ஆகிய பெறுகைகளை மேற்கொள்ளும் போது எழுத்து மூல ஒப்பந்தம் இருக்க வேண்டிய போதும் சபை அதன் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | 2018 ஆண்டில் கால்நடை உணவு வழங்கல் மற்றும் பசளை வழங்களிற்காக தெரிவு செய்யப்படும் வழங்குனர்களுடன் எழுத்து மூல ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளது. | பெறுகைகள் வழிகாட்டிக் கோவை பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (v) | டென்டர் நிபந்தனைகள் பிரகாரம் வழங்குனர்களிடமிருந்து பெற்றுக் கொண்ட மாதிரிகளை இரசாயனகூட பரிசோதனைக்கு உட்படுத்தி தரத்தை உறுதி செய்து கொண்ட பின்னர் கொள்வனவு செய்ய வேண்டிய போதும் மாதிரி பெற்றுக் கொள்ளாது மெனிக்பாளம மற்றும் ஏனைய 19 பண்ணைகளிற்கு மாட்டு உணவு கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. | 2020 ஆண்டு முதல் வழங்குனர்களை தெரிவு செய்யும் போது குறித்த கால்நடை உணவுகளின் மாதிரியை இரசாயனகூட பரிசோதனைக்கு உட்படுத்திய பின்னர் தொழிநுட்ப ஆய்வுக் குழு ஊடாக மேற்கொள்ளும் செயற்பாடுகளினூடாக தெரிவு செய்யப்பட்டுள்ளனர். | மாதிரி தரத்தை உறுதி செய்து கொண்டதன் பின்னர் கொள்வனவு செய்ய வேண்டும். |
| (vi) | சபையின் பெறுகைகள் குழுவினால் 2018 நவம்பர் 08 திகதி டென்டர் கோராது மற்றும் மாதிரி பரிசோதிக்காது ரிதியாகம பண்ணைக்கு 2018 நவம்பர் 14 முதல் 2019 சனவரி 01 திகதி வரை 834.5 மெட்ரிக் டொன் மாட்டு உணவு ரூபா 53,063,164 | ரிதியாகம பண்ணைக்கு மாட்டு உணவு (Type 01) கொள்வனவு செய்ய கோரிய டென்டரிற்கு மஹவலி பீட் மில்ஸ் நிறுவனத்தினால் விலை மணு சமர்பித்திருந்ததால் தொழிநுட்ப ஆய்வுக் குழு | டென்டர் கோரி மற்றும் மாதிரி பரிசோதித்ததன் பின்னர் கொள்வனவு செய்ய வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பட்டியல் விலைக்கு ஜாஎல பிரதேசத்தில் தனியார் கம்பனியொன்றில் இருந்து கொள்வனவு செய்து கொடுப்பனவு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | பரிந்துரையின் மீது மீண்டும் டென்டர் கோராது மஹவலி பீட் மில்ஸ் நிறுவனத்திற்கு 2018 நவம்பர் 08 முதல் 2018 திசெம்பர் 31 திகதி வரை ரிதியாகம பண்ணைக்கு மாட்டு உணவு டென்டர் ஒப்படைப்பு மேற்கொள்ளப்பட்டது. | |
| (vii) | ரிதியாகம பண்ணைக்கு மாட்டு உணவு கொள்வனவு செய்கையில் மூன்று அலுவலர்களுடன் கூடிய குழுவினால் விலைமனு திறத்தல் தொடர்பான அறிக்கை குறிப்பொன்றை இட்டிருந்த போதும் அவ்வறிக்கைக்கு பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 6.3.6 பந்தி பிரகாரம் பெறுமதி சேர்க்கப்பட்ட மற்றும் பெறுமதி சேர்க்கப்படாத விலை மணு, விலை மணு காப்புத் தொகை மற்றும் அது காணப்படும் வங்கி ஆகிய நிதிரீதியான தகவல்களை உள்ளடக்கி இருக்கவில்லை. | 2022 ஆண்டு முதல் பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 6.3.6 பந்தி பிரகாரம் அ, ஆ, இ, இன் கீழ் உள்ளடங்க வேண்டிய நிதிரீதியான தகவல்களை உள்ளடக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | பெறுகைகள் வழிகாட்டிக் கோவை பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | தேசிய கால்நடை வள அபிவிருத்தி சபையின் கீழான பண்ணைகள் மற்றும் ஏனைய கம்பனிகளுக்கு சொந்தமான கோழி உணவு தயாரிக்கும், அரைக்கும் மற்றும் கலக்கும் இயந்திரங்களில் இருந்து மற்றும் கால்நடை உணவிற்கு தேவையான சோளம், சோயா போன்ற பயிர்களை பயிரிட்டுள்ள காணிகளில் கால்நடை உற்பத்தி திணைக்களத்தின் புதிய அறிவை பயன்படுத்தி தரத்தில் உயர்ந்த கால்நடை உணவு உற்பத்தியின் கால்நடை உணவு செலவை குறைத்துக் கொள்ளவும் பண்ணைகளின் இலாபத்தை உயர்த்தவும் நடவடிக்கை எடுப்பது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. | 2022 ஆண்டு முதல் இனவிருத்தி கோழி பண்ணைகள், பன்றி கருத்திட்டங்களிற்கு தேவையான கால்நடை உணவு சபையின் கால்நடை உணவு உற்பத்தி நிலையங்களினூடாக உற்பத்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | சபைக்கு சொந்தமான கோழி உணவு தயாரிக்கும், அரைக்கும் மற்றும் கலக்கும் இயந்திரங்களினால் உற்பத்தி செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |